செய்தி வெளியீட்டு எண்.79 நாள்.07.02.2016

# திருவள்ளூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் சத்துணவு மையங்களில் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., தகவல்

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்ட மையங்களில் ஏற்பட்டுள்ள சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புதல் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., வெளியிட்ட செய்தி குறிப்பு.

திருவள்ளூர் மாவட்ட சத்துணவு திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமனத்திற்கு பெண்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில்-10, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில்-19, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில்-20, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில்-19, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில்-12, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில்-13, புழல் ஊராட்சி ஒன்றியத்தில்-5, பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில்-23, இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில்-26, சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில்-21, திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில்-20, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில்-7, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில்-13, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில்-20, ஆவடி நகராட்சி-10 என மொத்தம்; 238 பணியிடங்கள் நிரப்பிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கல்வித் தகுதி:- பொதுப்பிரிவு / தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பின் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினராக இருப்பின் 8-வது தேர்ச்சி/தோல்வி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு:- பொதுப்பிரிவு/ தாழ்த்தப்பட்டவர்கள் 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். பழங்குடியினராக இருப்பின் 18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்கு வேண்டும். விதவை / கணவரால் கைவிடப்பட்டோராக இருப்பின் 20 வயது பூர்த்தியடைந்து 40 வயதுக்கும் மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

ஊதிய விகித முறை: ரூ.2500-5000-GP-ரூ.500 என்ற ஊதிய விகிதத்தில் நடைமுறையில் உள்ள படிகள்

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள்: பாஸ்போர்ட் சைஸ் போட்டோ விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும், கல்வி சான்று நகல், மாற்று சான்றிதழ் நகல், சாதி சான்றிதழ் நகல், குடும்ப அட்டை நகல், இருப்பிட சான்று நகல், வருமானச்சான்று நகல், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் எனில் அதற்கான வட்டாட்சியர் சான்று, மாற்றுத்திறனாளிகள் எனில் அதற்குரிய அடையாள அட்டை (ம) மருத்துவர் சான்று நகல் இவை அனைத்தும் நேர்முக தேர்வின் போது அசல் சான்றிதழ்கள் அளிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பிக்கும் இடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்க வேண்டும். காலிப்பணியிடங்களுக்குரிய இனசுழற்சி முறை விபரம் அந்தந்த ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம். மேற்கண்ட காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பம் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / நகராட்சிகளில் அலுவலக நேரத்தில் நேரில் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சத்துணவு மையத்தின் விவரத்துடனும் மற்றும் உரிய சான்றிதழ் நகல்களுடன் 17.02.2017 மாலை 5.00 மணிக்குள் அந்தந்த ஊராட்சி ஒன்றியம்/ நகராட்சிகளில் அலுவலங்களில் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~